# தொழில்நுட்பக்கல்வித் துறை

அனுப்புநர்

இயக்குநர்,
தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்,
சென்னை 600 025.

பெறுநர்

முதல்வர்கள்,
அனைத்து அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகள் / பாலிடெக்னிக்குகள் மற்றும் சுயநிதி பொறியியற் கல்லூரிகள் / பாலிடெக்னிக்குகள்.

கடித எண் 48718 / இ3 / 2015, நாள் 09.12.2015

ஐயா / அம்மையீர்,

பொருள் : தொழில்நுட்பக்கல்வி – தமிழ் நாட்டில் பெய்த வரலாறு காணாத கனமழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நிதி வழங்குவது – தொடர்பாக.

***

தமிழ் நாட்டில் பெய்த வரலாறு காணாத கனமழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு, தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தின் கட்டுபாட்டின் கீழ் இயங்கும் அனைத்து அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகள் / பாலிடெக்னிக்குகள் மற்றும் சுயநிதி பொறியியற் கல்லூரிகள் / பாலிடெக்னிக்குகள் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் அனைத்துப் பணியாளர்களின் விருப்பத்தின் அடிப்படையில், முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு அவர்கள் அளிக்கும் நிதியினை பெற்று **14.12.2015க்குள்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு “Chief Minister’s Public Relief Fund” என்ற பெயரில் வரைவோலையாக அனுப்பியோ **அல்லது** முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு என ஏற்படுத்தப்பட்டுள்ள வங்கிக் கணக்கில் இணையம் மூலமாகசெலுத்தியோ, அதன் விவரத்தை இயக்ககத்திற்கு உடனே அனுப்பி வைக்குமாறு அனைத்து அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகள் / பாலிடெக்னிக்குகள் மற்றும் சுயநிதி பொறியியற் கல்லூரிகள் / பாலிடெக்னிக்குகளின் முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

<u>வரைவோலையாக அனுப்பவேண்டிய முகவரி :</u>

The Joint Secretary & Treasurer,
Chief Minister's Public Relief Fund,
Finance (CMPRF) Department, Government of Tamil Nadu,
Secretariat, Chennai – 600 009.

<u>வங்கிக் கணக்கில் இணையம் (ECS) மூலம் பணம் செலுத்த வேண்டிய முகவரி :</u>

| | | |
|---|---|---|
| Name of the Bank | : | Indian Overseas Bank |
| Branch | : | Secretariat Branch, Chennai – 600 009. |
| S B A/c. No. | : | 11720 10000 00070 |
| IFS Code | : | IOBA0001172 |
| CMPRF PAN No. | : | AAAGC0038F |
| Email Id | : | jscmprf@tn.gov.in |

3/12/2015

தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்காக.

09/12/15